தேயிலை ஆராய்ச்சி சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேயிலை ஆராய்ச்சி சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பபட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 8 இன் 69 ஆம் பந்தியின் படி ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் நிதி ஏற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும், மேலும் பொருளாதார நன்மைகள் அல்லது சேவை திறனை உள்ளடக்கிய வளங்களின் வெளியேற்றம் கடமையைத் தீர்க்க இனி தேவைப்படாவிட்டால் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றாலும், 2014 மற்றும் 2019 காலப்பகுதிகளில்	2018 ஆம் ஆண்டிற்கான ஊக்குவிப்பு படியாக வழங்கப்பட வேண்டிய ரூபா 262,336 தொகையானது, 2017/2018 ஆம் ஆண்டில் தேயிலை விற்பனை நிலையத்தில் நடந்த பண மோசடி தொடர்பாக இடைநீக்கம் செய்யப்பட்ட நபர்களுக்கு செலுத்த வேண்டிய தொகையாகும், மீதமுள்ள தொகை ரூபா 1,026,670 என்பது	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

	புனித கூம்ப்ஸ் தோட்ட ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு படி செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,289,006 நிதி ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளுடன் இணக்கம் செய்யப்படவில்லை. மேற்படி நிலுவையில் கூம்ப்ஸ் தோட்டத்தை விட்டு வெளியேறிய மூன்று உத்தியோகத்தர் களுக்கு ஊக்குவிப்பு படி செலுத்துவதற்காக 2016 இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 382,335 மீதியும் உள்ளடங்குகின்றது.	2015, 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தோட்ட ஊழியர்களின் ஊக்குவிப்பு படி கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையாகும், மேலும் ஊக்குவிப்பு படி கொடுப்பனவுகள் தற்போது இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக .	
(ஆ)	2018 ஜனவரி 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வந்த பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் இடைக்கால ஏற்பாடுகளின் படி, மூலதன மானியமாகப் பெறப்பட்ட சொத்தின் பெறுமதி அதன் பயனுள்ள வாழ்நாளில் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தால், சொத்தின் முழு பெறுமதியும் 3 ஆண்டுகளுக்குள் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், மூலதன மானியமாகப் பெறப்பட்டு, 2021 ஜனவரி 01 இல் உள்ளவாறு நிறுவனத்தால் வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டிய ரூபா 395,770,540 (Grant & Reserves) மீளாய்வண்டின் இறுதியில் நியமத்தின் இடைக்கால ஏற்பாடுகளின் படி வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம், மூலதன மானியங்கள் 2025 ஆம் ஆண்டு முதல் வருமானமாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது பேணிச் செல்லப்படும் மீதிகள் அடுத்த 03 ஆண்டுகளுக்கு பிற்போடப்பட்ட வருமானமாக அங்கீகரிக்கப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து அடுத்த ஆண்டின் போது சரியாக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(இ)	சபை அமைந்துள்ள வளவிலும் தோட்டங்களிலும் நடப்பட்டுள்ள மஹோகனி, பலா மற்றும் யூகலிப்டஸ் போன்ற 10,629 பெறுமதியான மரங்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 18 இன் 13 மற்றும் 16 ஆம் பந்திகளின் பிரகாரம் நுகர்வு உயிரியல் சொத்துக்கள் என இனங்காணப்பட்டு அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.	மரங்களை பெறுமதியை மதிப்பிடுவதற்கான முதற்கட்ட பணிகள் அரச மரக் கூட்டுத்தாபனத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, அந்தப் பணிகள் முடிந்ததும், 2025 ஆம் ஆண்டில் அதற்குக் கணக்கு வைக்கப்படும்.	விரைவில் வேலைத்திட்ட மொன்றைப் பயன்படுத்தி தொடர்புடைய சொத்துக்கள் மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 9 இன் 09 ஆம் பந்தியின் படி சேவைகளை வழங்கும் போது பயன்பாட்டிற்காக அல்லது விநியோகம் அல்லது நுகர்வுக்காகவோ பயன்படுத்துவதற்காக வைத்திருக்கும் பொருட்கள் அல்லது பொருட்கள்	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக ஏற்படும் செலவுகள் அதே ஆண்டில் செலவுகளாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட ஆய்வுகூடங்களில் ஒரு இருப்புப் பதிவேடு	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சீராக்கம் செய்து சரியாக நிதிக்

	சரக்குகளாக அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் 3 ஆய்வுகூடங்களில் குழுவின் ஆராய்ச்சி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட மொத்தம் 1154 கிலோகிராம் கொண்ட 163 வகையான இரசாயனங்கள் (திரவ இரசாயனங்கள் தவிர) நிதி நிலைமைக் கூற்றில் இருப்பாக இனங்காணப்படா திருந்ததுடன் மேலும் அவற்றின் முழு செலவும் பெறுகை ஆண்டில் வருமான கூற்றில் ஆராய்ச்சி செலவுகளாகக் காட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	பராமரிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் இந்த ஆய்வுகூடங்களில் இருப்பு பெறுமதிகளைக் கணக்கிட்டு பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனபதாக.	கூற்றுக்கள் சமர்ப்பிக்கபபட வேண்டும்.
(உ)	தேயிலை ஆராய்ச்சி சபைக்கு உரித்தற்ற இலங்கை தேயிலை சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட 02 வாகனங்கள் ரூபா 250,000 தொகைக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு சபையின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்ததால், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களும் மீள் மதிப்பீட்டு ஒதுக்கமும் அந்த பெறுமதியால் கூடுதலாக காட்டப்பட்டுள்ளன.	வருமான அனுமதிப்பத்திரம் பெற்ற பிறகு ஒரு வாகனம் புதுப்பிக்கப்பட்டு பதிவு திருத்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டதாக மேலும் ஒரு மோட்டார் சைக்கிள் ஏலத்தில் விற்கப்பட்டதாகவும்.	சட்டப்பூர்வ உரித்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 09 இன் 25 (இ) பந்தியின் பிரகாரம் இருப்பினை தற்போதய இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டு வருவதற்கு பங்களிப்பு செய்யாத நிர்வாக பொது மேந்தலைக் கிரயம் இருப்பின் கிரகத்திலிருந்து அகற்றப்பட்டு அவை செலவிடப்பட்ட காலப்பகுதியில் செலவினமாக இணங்க காணப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்கு இணங்காத வகையில் புனித கூம்ஸ் தோட்டத்தின் முடித் தேயிலை இருப்பு கணக்கிடும் போது வருமான கூற்றுக்கு செலவினம் ஒன்றாக பதிவழிக்கப்பட வேண்டிய ரூபா 12,219,207 இருப்பின் கிரயத்தை கணக்கிடும் போது கருத்தில் கொண்ட காரணத்தினால் இருப்பின் கிரயம் அப் பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது.	இருப்பினை தற்போதைய இடத்திற்கு கொண்டு வருவதற்கு பங்களிப்பு செலுத்தாத நிர்வாக பொது மேந்தலை கிரயத்தை இருப்பின் கிரையத்திலிருந்து அகற்றி இருப்பினை கணக்கிடுவதற்கு 2005 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுவதாக.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சீராக்கம் செய்து அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(எ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 28 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் இனங்காணும் போது அதன் கிரயத்திற்கு இனங்கணப்பட வேண்டியதுடன் கிரயமாக உரிய சொத்துக்கள் தற்போதய இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டு வருவதற்காக	இயந்திரங்கள் பொறிகளை கணக்கிடும் போது நிறுவனத்தால் செலவிடப்படும் செலவுகளை மாத்திரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தள்ளது. இந்தக் கணக்கீட்டு பிழை 2025 ஆம் ஆண்டு முதல் திருத்தம் செய்யப்படும் என்பதாக.	- மேற்படி -

	செலவிடப்பட்ட செலவினம் கிரயத்தின் பகுதி ஒன்றாக இனம் காணப்பட வேண்டி இருந்தது. எனினும் அதற்கு இணங்காத வகையில் 2023 ஆம் ஆண்டில் தாவர இனவிருத்தி)Plant Breeding(ஒன்றாக கிடைத்த ஆய்வுகூட ஆராய்ச்சி உபகரணத்தை கணக்கீடு செய்யும் போது சுங்க கட்டணம் உட்பட ரூபா 9,500,656 ஆன செலவினம் கிரயத்தின் பகுதி ஒன்றாக இனம் காணப்பட்டிருக்கவில்லை இதன் காரணமாக நிதிக் கூற்றுகளில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி 9,500,656 ஆலும் பெறுமானத்தேய்வு 1,900,131 ஆலும் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.		
(ஏ)	மீளாய்வாண்டிற்குரிய ரூபா 3,624,341 ஆன செலவினமொன்று 2025 ஆம் ஆண்டில் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டமை காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் அட்டுறு செலவினும் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது	கணக்கீட்டு பிழை 2025 ஆம் ஆண்டு முதல் திருத்தம் செய்யப்படும் என்பதாக.	- மேற்படி
(ஐ)	SRL 5050s UPORTING Genetic IMP Project செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 7,285,885 தொகை நடைமுறை வேலையாக செயற்திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அதற்குரிய நடைமுறை வேலை செயற்திட்டம் என்று காணப்படவில்லை மேலும் செயற்திட்டத்திற்குரிய உபகரணங்கள் விடுவிப்பு கட்டணத்திற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த பணம் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அது மானியங்கள் மற்றும் பெறுவனவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. .	நடைமுறை வேலை செயற்கை திட்டத்தில் காணப்படுகின்ற கணக்கு மீதி ரூபா 7,285,885 ஆன தொகையை மூலதன ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்பட்டு அதில் பிற்போடப்பட்ட வருமானமாக 03 ஆண்டுகளில் கணக்கில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	அடுத்த ஆண்டின் நிதி கூற்றுகள் தயாரிக்கும் போது கணக்கீட்டு தவறுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்கு சொந்தமான புனித கூம்ப்ஸ் தோட்டத்தில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நிதி மோசடிகள் காரணமாக ரூபா 10,321,858 மீதியானது 06 வருடங்களுக்கும் மேலாக கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய உரிய விசாரணைகளை நிறைவு செய்து பொறுப்பான தரப்பினரிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த சம்பவத்தில் தொடர்புடைய புனித கூம்ப்ஸ் தோட்டத்தின் மூன்று உத்தியோகத்தர்கள் மீது குற்றப்பத்திரிகை யொன்று தாக்கல் செய்யப்பட்டு பரிசோதனை மேற்கொண்டு அவர்களின் பணி இடைநிறுத்தப் பட்டுள்ளதுடன் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	சட்ட நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டு விரைவில் இழப்பீடுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில், சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, பெருந்தோட்ட அமைச்சு மற்றும் தேயிலை சபை ஆகியவற்றிற்கு தேயிலை ஆராய்ச்சி சபைக்கு தேயிலை விற்பனையில் பெற வேண்டிய ரூபா 494,194 புனித கூம்ப்ஸ் தோட்டத்தின் கடன்பட்டோராகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணத்தை அறவிடுவதற்கு சபைக்கு இயலாதிருந்தது.	இது தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்கு நிறுவனத்தினால் 2025.05.09 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரையின் பேரில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது அந்த அறிக்கை 2025.05.31 ஆம் திகதி அளவில் பெற்றுக் கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கை கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக.	கடன் தொகையை அறவிடுவதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் தாமதம் இன்றி பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(இ)	முழு சம்பளத்துடன் கல்வி விடுப்பு பெற்று வெளிநாடு சென்று மீண்டும் பணிக்குத் திரும்பாமல், பணிக்குத் திரும்பிய பின்னர் கட்டாய சேவைக் காலம் முடிவதற்குள் சேவையை விட்டுச் சென்றுள்ள 04 உத்தியோகத்தர்கள் 2005ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை சபையுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை மீறியகாரணத்தினால் தொடர்புடைய பிணைமுறிப் பெறுமதியான ரூபா 15,054,891 தொகை 2025மே16 ஆந் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மீள அறவிடப்பட்டிருக்கவில்லை	அனைத்து சம்பவங்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுத்து எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக.:.	கடன் தொகையை அறவிடுவதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் பெறவேண்டிய பணத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய பணம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	புனித கூம்ப்ஸ் தோட்டத்தின் பல்வேறு மொத்த வழங்குனர்களுக்கு 02 முதல் 11 ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் கொடுத்தோர் மீதியான ரூபா 1,931,878 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்வதற்கு அல்லது உரிமை கோரப்படாத கடன் வழங்குநர்களுக்குத் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ள சபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இது தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்கு நிறுவனத்தினால் 2025.05.09ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரையின் பேரில் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது அந்த அறிக்கை 2025.05.31ஆம் திகதி அளவில் பெற்றுக் கொள்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கை கிடைத்தவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக.	முறையான புலனாய்வு ஒன்று மேற்கொண்டு மேலும் செலுத்த வேண்டிய மீதிகள் நிச்சயிக்கப்பட்டு அவற்றை தீர்வு செய்வதற்கும் அவ்வாறு இல்லாத மீதிகளை வருமானத்துக்கு எடுக்கப்பட வேண்டும்
(ஆ)	சபையினால் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பொது திறைசேரிக்கு 04 வருடங்களுக்கு மேலாக செலுத்த வேண்டிய நிலுவைகள் முறையே ரூபா 480,000 மற்றும் ரூபா 699,717 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	திறைசேரிக்கு செலுத்த வேண்டிய ரூபா 699,717 தொகை கொடுப்பனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சிறு தேயிலைத் தோட்ட அதிகார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 431,728 தொகையை அறவிட்டு கொடுப்பனவு செய்வதற்கு உள்ள ரூபா 480,000 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	- மேற்படி -

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள்/ பிரமாணங்களுடனான தொடர்பு	விபரம்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது	வருடாந்த பொருட் கணிப்பீடொன்று மேற்கொண்டு	2023 ஆம் ஆண்டின் கணிப்பீட்டு நடவடிக்கைகள்	உரிய காலத்தில் பொருள் மெய்மையாய்வி

	முயற்சிகள் சுற்றறிக்கையின் 11.1 ஆம் பந்தியின் மூலம் திருத்திய நி.பி 756(6)	முடிவுறுத்தும் காலப்பகுதியின் பிரகாரம் சபையின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை அடுத்த ஆண்டின் ஜூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2025 மே 26 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	முடிவடைந்துள்ளதுடன் கைதவிர்ப்பதற்க்காக போதியளவு பொருட்கள் இல்லாமையால் கை தவிர்ப்பு ஏல விற்பனை நடவடிக்கைகளை அடுத்த ஆண்டில் மேற்கொள்வதற்கும் நிறுத்தி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	னை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தி	2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்குரிய சபையின் ஆண்டறிக்கை 2025 மே 26 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	மிக விரைவில் பாராளுமன்றத்தில் முன் வைப்பதற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் விரைவில் ஆண்டறிக்கை சபையில் முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2022 திசெம்பர் மாதம் 14 ஆம் திகதிய 29/2310ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் வெளியிடப்பட்ட விதிக்கோவையின் விதி இலக்கம் 100	முறையான நியமனம் ஒன்று பெற்றுக் கொள்ளப்படும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கடமை பட்டியல் ஒன்று எழுத்து மூலம் கையளிப்பதற்கு பிரிவுகள் அல்லது கிளைகளின் தலைவரால் தாமதம் இன்றி செய்யப்பட வேண்டிய போதிலும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் உத்தி	தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் அநேகமான உத்தியோகத்தர்களுக்கு கடமைப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளதுடன் ஏனைய உத்தியோகத்தற்காக தயாரிக்கப்பட்ட கடமைப் பட்டியல் எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	முறையான நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கும் அனைத்து உத்தியோகத்தர்களுக்காக கடமைப்பட்டியல்

	யோகத்தர்களுக்காக கடமைப் பட்டியல் (Duty List) ஒன்று எழுத்து மூலம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.	வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு
நிதிப் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 56,123,000 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய வருடத்தின் மிகை ரூபா 12,740,000 ஆகும். அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 68,224,000 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. சம்பள மாற்றம் காரணமாக பணிக்கொடை ஒதுக்கீடு அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு
3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் விசேட செயற்திட்டங்களின் கீழ், காலநிலை மாற்றத்திற்கான தேயிலை செடியின் தகவமைப்புப் பதில்களை ஆய்வு செய்வதற்காக 2017 நவம்பர் 24 ஆந் திகதி ரூபா 12,554,583 செலவில் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் எதிர்பார்க்கப்பட்ட விவரக் குறிப்புகளுக்கு இணங்காததாலும், எதிர்பார்த்த அளவில் அதன் செயல்திறன் இல்லாததாலும், கொள்வனவு 6 ஆண்டுகளாகத் கடந்திருந்த போதிலும் ஆராய்ச்சிக்காக பயன்படுத்த முடியாது செயலற்ற நிலையில் இருந்தது.	இது தொடர்பாக நீதிமன்ற நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் நிறுவனத்தினால் பெயரிடப்பட்டுள்ள மூன்று தீர்ப்பாளர்களின் ஈடுபாட்டுடன் உரிய எதிர்த்தரப்பபிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது அதற்காக காலத்தை வழங்கி அடுத்த வழக்கு தினமான 2025.06.19 திகதி வரை பிற்போடப்பட்டுள்ள தாக.	எதிர்பார்த்த விவரக்குறிப்புக்கள் இல்லாத உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் எதிர்பார்த்த செயற்பாடுகளை நிறைவேற்றாமை தொடர்பாக முறையாக பரிசோதனை ஒன்று மேற்கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.
(ஆ)	இலங்கை தேயிலை ஆராய்ச்சி சபைக்கான முகாமைத்துவ தகவல் முறைமையை உருவாக்குதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்கான அரச கம்பனியொன்றுக்கு ஒப்பந்தம் 2020 ஏப்ரல் 22 அன்று ரூபா 4,228,700 தொகைக்கு வழங்கப்பட்டதுடன், 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ரூபா 1,141,749 முற்பணமாக செலுத்தப்பட்டது. சேவை வழங்குநர் நிறுவனம் சமர்ப்பித்த விலைக்கேள்வி ஆவணங்களின்படி, கட்டளை வழங்கப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் வேலையை முடிக்க வேண்டிய போதிலும், 2025 மே 26 ஆந்	பூர்த்தி செய்யப்பட்ட 8 மொடியுல்கள் தற்போது தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் நிதி மற்றும் கணக்கீட்டு மொடியுல்கள் மற்றும் சம்பள பதிவேட்டு மொடியுலுக்குரிய தரவுகளை உட்படுத்துதல் அப்பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட போதும் அதில் தாமதம் ஒன்று காணப்பட்ட போதும் தற்போது தரவுகள்	உரிய காலத்தில் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பணிகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	திகதி வரையிலும் 5 ஆண்டுகள் கடந்துவிட்டாலும், அதன் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	உள்ளடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக.	
(இ)	2019 – 2023 ஆராய்ச்சி செயற்திட்டங் களுக்கான தந்திரோபாய திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 242.42 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்ட காலத்தில் தந்திரோபாய திட்டத்தின் நோக்கங்கள் 01 உரிய நிகழ்ச்சிகள் மற்றும் 172 செயற்திட்டங்களை செயல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் 2024 ஆம் ஆண்டின் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட தந்திரோபாய திட்டத்தின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் திட்டத்தின் நோக்கங்கள் 01 இற்குரிய 2023 ஆம் ஆண்டு வரை நிகழ்ச்சிகள் மற்றும் 143 செயற்திட்டங்கள் நூறு சதவீத செயன் முன்னேற்றத்தை பெற்றுக் கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. அவற்றிற்கிடையே திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் ரூபா 30.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்த நிகழ்ச்சிகள் மற்றும் 47 திட்டங்கள் திட்டமிடப்பட்ட பிரகாரம் பூர்த்தி செய்யப்படாமை, நிறைவேற்றப்படாமை மற்றும் பிற்போட பட்டமை போன்ற வெவ்வேறு காரணங்களின் பேரில் தந்திரோபாய திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை தந்திரோபாய திட்டத்தில உள்ளடக்கப்பட்ட மேலும் நிகழ்ச்சிகள் மற்றும் 44 திட்டங்களின் செயன் முன்னேற்றம் தொடர்பான தரவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்படாமை காரணமாக அந்நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டதா இல்லையா அல்லது செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ள முடிந்ததா என உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.	இந்த செயற்திட்டத்தின் அநேகமானவை உரிய காலப்பகுதியில் (2019-2023) நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்த இருந்த போதும் புதிதாக வரும் புதிய வகை இனங்கள் பகுப்பாய்வு உட்பட மேம்படுத்தப்பட்ட பீடை கொல்லிகள் போன்ற பகுப்பாய்வு தொடர்ச்சியாக செய்யப்பட வேண்டி உள்ளதால் செயற் படுத்தப்படும் (on going) திட்டங்களாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவ்வாறு தேவைகள் நிபுணத்துவத்துடன் கூடிய உத்தியோகத்தர்கள் இல்லாமையால் சில செயற் திட்டங்களை செயற்படுத்த முடியாது உள்ளதாக.	இது தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு செலவிடப்பட்ட பணத்திற்கு நலன்களை பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் இருந்த உரிய தரப்பினருக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஈ)	Investigation on adoptive responses of Tea Plant to climate change என்ற செயற்திட்டத்துக்குரிய ரூபா 1,903,091 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட வெப்ப கட்டுப்பாட்டு உபகரணம் உரிய தொழில்நுட்ப நியதிகள் மற்றும் இனங்காமை அடிப்படையில் உரிய வழங்குனர் நிறுவனத்திற்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்டுள்ளதுடன் அந்த உபகரணம் இல்லாமை காரணமாக	செயற் திட்டத்திற்குரிய ஆராய்ச்சி நடவடிக்கை களுக்காக தேவையான பிரதான மற்றும் அவசியமான உபகரணமான அதிகரிப்பு கட்டர் தேவை யான சூழலில் நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் பேணிச் செல்லப் படுவதாக அவதானிக்கப்பட்ட	உத்தேச சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வேறு மாற்று நடைமுறை யொன்றை எடுத்த முறைப் படி இந்த திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவத ற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	செயற்திட்டம் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	தால் தற்போது வழங்குனர் கம்பெனிக்கு அறிவிக்கப்பட்ட போதும் முறைப்படி இந்த உபகரணத்தை செயற்படுத்த முடியாது இருந்தது இது தொடர்பாக இதன் பின்னர் புலனாய்வு ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக.	
(உ)	2018 ஆம் ஆண்டு முதல் புனித கூம்ப்ஸ் தோட்டத்தில் தேயிலை விற்பனை நியைம் ஒன்றிற்காக முன்தயாரிக்கப்பட்ட கொள்கலன் காட்சியறையை நிறுவும் பணி இதுவரை பூர்ததி செய்யப்படவில்லை, அதற்காக செலவிடப்பட்ட ரூபா 760,604 நடைமுறை வேலைகளாக பணிகளாக கணக்கீடு செய்யகப்பட்டிருந்தது.	தற்போது தேயிலை விற்பனை நிலையத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் இதற்கான செலவினமான பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக.	சட்ட நடவடிக்கைகளை விரைவு படுத்துவதற்கும் முறையான ஆய்வு ஒன்று இல்லாமல் இவ்வாறான செயற்திட்டங்களை செயல்படுத்தும் உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 செயற்பாட்டு வினைததிறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் நிதி நிலைமை கூற்றில் நடைமுறை செயற்திட்டமாக காண்பிக்கப்பட்டுள்ள மொத்தம் ரூபா 18,345,666 ஆன 14 செயற்திட்டங்கள் ஆண்டு 2 இற்கும் 5 இற்கும் இடைப்பட்ட காலமாக செயற்பாடின்றி காணப்பட்டன.	செயலற்ற செயற திட்டங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்கள் வெளி நிதியங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற செயற் திட்டங்கள் ஆகும் அதற்கு இடையே ஒரு செயல் திட்டம் தவிர ஏனைய ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு இறுதி அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளதாக.	முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு செயற்திட்டங்கள் செயல்படாமல் இருப்பதற்கான காரணங்களை கண்டறிந்து அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	புனித கூம்ஸ் தோட்டத்தில் 2017 – 2024 வரையான காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவு தேயிலை அளவு தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்தமை அறிக்கை இடப்பட்டது. அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் 374,893 கிலோகிராம் ஆக காணப்பட்ட வருடாந்த உற்பத்தி 2024 ஆண்டு	இதன் போது தோட்டத்தின் தேயிலை உற்பத்தியில் பாரியளவு விலகலொன்று இடம்பெற்றிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2024 ஆம் ஆண்டு கொள்வனவு	குறைந்துள்ளதாக முறையான புலனாய்வொன்று மேற்கொண்டு உற்பத்தி குறைவதற்குரிய காரணங்களை தேடி அது தொடர்பாக நடவடிக்கைகள்

	அளவில் 254,050 கிலோகிராம் வரை குறைவடைந்து இருந்தது அது 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 32 சதவீத குறைவாக காணப்பட்டது மேலும் மீளாய்வான்டில் முடிவு தேயிலை உற்பத்தி 2023 ஆம் ஆண்டிற்கோப்பாக 76 சதவீதம் குறைவொன்றும் அதாவது 76,113 கிலோகிராம் குறைவு மேலும் அவதானிக்கப்பட்டது.	செய்யப்பட்ட தேயிலை அளவு போட்டி அடிப்படையில்	எடுப்பதற்கும் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் வேலை திட்டம் ஒன்று ஈடு படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 விளைவற்ற குறைப்பாயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தேயிலை ஆராய்ச்சி சபைக்கு சொந்தமான தலவாக்கலையில் உள்ள லேம்லியர் தோட்டத்தின் 1.367 ஹெக்டேயர் காணிப் பரப்பு, தொழிற்சாலை மற்றும் அனைத்து கட்டிடங்களும் 2003 ஆம் ஆண்டு 50 ஆண்டுகளுக்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி வாடகையை செலுத்தாததால் தொடர்புடைய சொத்துக்கள் மீண்டும் கையேற்கப்பட்டன. ஆனால் கையேற்கப்பட்ட திகதியிலிருந்து 2025 மே வரை அதாவது 09 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும், அந்த சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் இருந்தன.	கட்டிடங்களின் பயன்பாடு மற்றும் பராமரிப்பிற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டு குழு அவதானிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு தேயிலை ஆராய்ச்சி சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக.	முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு நிலுவை குத்தகை காணப்பட்டால் அறவிடுவதற்கும் அவற்றை அறவிடாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் 9 ஆண்டுகள் கட்டிடங்களை பயன்படுத்தப்படாமல் வைத்திருந்த உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகள் 36 நிலவிய போதும் மீளாய்வாண்டின் போது அவற்றுள் 26 வெற்றிடங்கள் காணப்பட்டன. இந்த வெற்றிடங்களிடையே 08 பிரிவுத் தலைவர் பதவிகளும் 11 பிரதான ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளும், 04 பிரதான மதியுரை உத்தியோகத்தர் பதவிகளும் உள்ளடங்களாக 23 பதவிகள் உள்ளக பதவியுயர்வின் மூலம் நிரப்பப்பட வேண்டிய போதிலும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அந்த பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. மேலும் மூன்றாம் மட்டத்தின் கனிஷ்ட முகாமையாளர் மற்றும் தொழிற்பாட்டு உத்தியோகத்தர் 47 பதவிகள் இரண்டாம் மட்டத்தின் முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 83, ஆரம்ப மட்டத்தின் பதவிகள் 88 ஆக	இதுவரை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பிரதான பிரிவு தலைவர் பதவிகளை நிரப்பு வதற்காக 2025 ஏப்ரல் 30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அரச சேவை ஆட்சேர்ப்பு மீளாய்வு குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக.	காணப்படும் செயற்பாட்டின் பிரகாரம் பதவியணியினர் மீளாய்வொன்று மேற்கொண்டு தேவையான வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மொத்தம் 218 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் 61 சதவீதமாகும். மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையில் இப்பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன மேலும் மனித வள முகாமைத்துவத்திற்காக சட்ட விதிகளை தயாரிப்பதற்கு உரிய செயற்பாட்டு கைநூல் ஒன்றை தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை மீளாய்வாண்டிலும் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.